ஒரு கோரிக்கை வைக்கச் சொன்னார்கள். சிலைமானிலே இருந்து கல்லூரிக்குப் போகின்றபோது பெரியார் பேருந்து நிலையம் வந்து அதற்குப் பிறகு திருப்பரங்குன்றம் போக, இரண்டு பஸ் மாறிச் செல்லக் கூடிய சூழ்நிலை. எனவே, மாணவ, மாணவிகளுடைய நலனைக் கருத்தில்கொண்டு நம்முடைய இதயதெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில் சிலைமானிலிருந்து திருப்பரங்குன்றம் வரை நேரடி பஸ் விடப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *127*, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

127—

பெருந்தொழில்

***50854அ—திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதியில் டிட்கோ மூலமாக பெருந்தொழில் துவங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் *128*, திரு. க. தவமணி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்.